பதிவஞ்சலில்

வேளாண்மைத்துறை

அனுப்புநர்

திரு.மகேந்திர பிரதாப் தீட்சித், எம்எஸ்ஸி(விவ),
வேளாண்மை இணை இயக்குநர்,
வேலூர்.

பெறுநர்

மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்-632 009.

கடித எண்.உ2/7017/2020 நாள்:28.09.2020.

ஐயா,

பொருள்: வேளாண்மை-தடையில்லாச் சான்று – வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், சதுப்பேரி கிராமம் - நன்செய் சர்வே எண்கள்.170/1, 170/2, 170/3, 170/4, 171/4 மற்றும் 173/2 ஆகியவற்றின் மொத்த விஸ்தீரணம் 1.13.00 ஹெக்டேர்ஸ் பரப்பு கொண்ட நிலத்தினை விவசாயம் அல்லாத பிற பயன்பாட்டிற்காக பயன்படுத்திக்கொள்ள (வீட்டு மனைப்பிரிவுகள் அமைக்க) தடையில்லாச் சான்று சமர்ப்பித்தல் - தொடர்பாக.

பார்வை: 1.மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் அவர்களின் கடித எண்.பி2/6838/2020, நாள். 08.09.2020
2.திரு.V.S.பாபு த/பெ.V.S.சீனிவாசன் அவர்களின் கடிதம் நாள்:இல்லை.
3.சதுப்பேரி கிராம நிர்வாக அலுவலர் அவர்களின் சான்று நாள்.15.09.2020

பார்வை 1-இல் குறிப்பிடப்பட்டுள்ள வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதத்தில் வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், சதுப்பேரி கிராமம் நன்செய் சர்வே எண்கள்.170/1, 170/2, 170/3, 170/4,171/3,171/4 மற்றும் 173/2 ஆகியவற்றின் மொத்த விஸ்தீரணம் 1.16.00 ஹெக்டேர்ஸ் பரப்பு கொண்ட நிலங்களில் வீட்டு மனைப்பிரிவுகள் அமைக்க தடையில்லாச் சான்று கேட்கப்பட்டுள்ளது. பார்வை 2-இல் குறிப்பிடப்பட்டுள்ள திரு.V.S.பாபு த/பெ. V.S.சீனிவாசன் அவர்களின் கடிதத்தில் நன்செய் சர்வே எண் 171/3-ஐ தவிர்த்து இதர சர்வே எண்களுக்கு தடையில்லாச் சான்று கேட்கப்பட்டதன் அடிப்படையில், மேற்காணும் நன்செய் நிலங்களை 25.09.2020 அன்று நேரில் ஆய்வு செய்ததின் அடிப்படையிலும், மேற்படி நன்செய் நிலத்தில் சுமார் 12 வருடங்களாக பயிரிடப்படவில்லை தரிசாக உள்ளது என சதுப்பேரி கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் பார்வை 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தின்படி அளித்துள்ள சான்றின் அடிப்படையிலும் மற்றும் பசலி 1428 முதல் பசலி 1430 வரையுள்ள 3 ஆண்டுகளுக்கான அடங்கலின் அடிப்படையிலும் மேற்படி நன்செய் நிலத்தினை விவசாயம் அல்லாத பிற பயன்பாட்டிற்காக பயன்படுத்திக்கொள்ள (வீட்டு மனைப்பிரிவுகள் அமைக்க) வேளாண்மைத்துறை மூலம் தடையில்லாச் சான்று இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பப்படுகிறது.

28/9/2020

வேளாண்மை இணை இயக்குநர்,
வேலூர்-2.

இணைப்பு- தடையில்லாச் சான்று

நகல்: திரு.V.S.பாபு
த/பெ.V.S.சீனிவாசன்,
எண்.199/1,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,
பகுதி-1,
வேலூர்.632 009. (பதிவஞ்சலில்)

28/9/2020

தடையில்லாச் சான்று

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், சதுப்பேரி கிராமம் நன்செய் சர்வே எண்கள்.170/1, 170/2, 170/3, 170/4, 171/4 மற்றும் 173/2 ஆகியவற்றின் மொத்த விஸ்தீரணம் 1.13.00 ஹெக்டேர்ஸ் பரப்பு கொண்ட நிலமானது திரு.வி.எஸ்.பாபு, த/பெ.வி.எஸ்.சீனிவாசன் என்பவருக்கு சொந்தமானது. மேற்குறித்த நன்செய் நிலத்தினை 25.09.2020 அன்று நேரில் ஆய்வு செய்ததின் அடிப்படையிலும், மேற்படி நன்செய் நிலத்தில் சுமார் 12 வருடங்களாக பயிரிடப்படவில்லை தரிசாக உள்ளது என சதுப்பேரி கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் அளித்துள்ள சான்றின் அடிப்படையிலும் மற்றும் பசலி 1428 முதல் பசலி 1430 வரையுள்ள 3 ஆண்டுகளுக்கான அடங்கலின் அடிப்படையிலும் மேற்படி நன்செய் நிலத்தினை விவசாயம் அல்லாத பிற பயன்பாட்டிற்காக பயன்படுத்திக்கொள்ள (வீட்டு மனைப்பிரிவுகள் அமைக்க) வேளாண்மைத்துறை மூலம் தடையில்லாச் சான்று வழங்கப்படுகிறது.

28/09/2020

வேளாண்மை இணை இயக்குநர்,
வேலூர் - 2.

28/09/2020

ப.மு.(பி2).6838/2020,

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
வேலூர்,
நாள். 24 .05.2022 .

தடையின்மைச்சான்று

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், சதுப்பேரி கிராமம், சர்வே எண்.170/1-ன் பரப்பு 0.14.0 ஹெக்டேர், 170/2-ன் பரப்பு 0.15.0 ஹெக்டேர், 170/3-ன் பரப்பு 0.01.5 ஹெக்டேர், 170/4-ன் பரப்பு 0.16.0 ஹெக்டேர், 171/4-ன் பரப்பு 0.48.0 ஹெக்டேர் மற்றும் 173/2-ன் பரப்பு 0.18.5 ஹெக்டேர், நிலங்களின் மொத்தப்பரப்பு 1.13.0 ஹெக்டேர் நன்செய் நிலத்தை விவசாயம் அல்லாத (வீட்டுமனைப்பிரிவு அமைக்க) பயன்பாட்டிற்காக பயன்படுத்திக்கொள்ள நகர ஊரமைப்பு துறை இயக்குநரிடமிருந்து (DTCP) ஒப்புதல் பெறும் பொருட்டு தடையின்மைச்சான்று வழங்கக்கோரி, வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், சத்துவாச்சாரி, தமிழ்நாடு வீட்டுவசதிவாரியம் எண்.199/1 என்ற விலாசத்தில் வசிக்கும் திரு.வி.எஸ்.பாபு த/பெ.வி.எஸ்.சீனிவாசன் என்பவர் அளித்த மனு தொடர்பாக, வேலூர் வட்டாட்சியர், வேலூர் வருவாய் கோட்ட அலுவலர், வேளாண்மை இணை இயக்குநர் வேலூர், செயற்பொறியாளர், (நீ.ஆ.து.) வேலூர், மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலும் மேற்படி நிலத்தினை விவசாயம் அல்லாத (வீட்டுமனைப்பிரிவு அமைக்க) பயன்பாட்டிற்காக பயன்படுத்திக்கொள்ள கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தடையின்மைச் சான்று வழங்கி ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. மனுதாரர் வீட்டுமனைப்பகுதிகளாக மாற்ற தடையில்லாச்சான்று கோரியுள்ள மொத்தம். 1.13.0 ஹெக்டேர் நன்செய் நிலங்களை விவசாயம் அல்லாத பிற உபயோகத்திற்கான வீட்டுமனைப் பகுதிகளாக மாற்ற நகர ஊரமைப்பு திட்ட சட்ட விதிகளுக்குட்பட்டு (Town & Country Planning) நிலவகை மாற்றம் செய்து கொள்ளுதல் வேண்டும்.
2. புல எண்.171/4 மற்றும் புல எண்.173/2-ற்கு சதுப்பேரி ஏரியின் மதகு எண்.9-ன் பாசனக்கால்வாயை கடந்து செல்ல மனுதாரரின் சொந்த செலவில் இத்துறையின் அனுமதி பெற்று சிறுபாலம் அமைத்துக்கொள்ள வேண்டும்.

3. புல எண்.173/2க்கு மேற்புறம் மற்றும் கீழ்புறத்தில் புறம்போக்கு கால்வாய்கள் செல்வதால் 173/2க்கு செல்ல ஏதுவாக புல எண்.174-க்கும் 173/2-க்கும் இடையில் அல்லது புல எண்.171/4-க்கம் 173/2க்கும் இடையில் சிறுபாலம் அமைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்த பின்னரே மாவட்ட நகர ஊரமைப்பு திட்ட அனுமதி (DTCP Approval) வழங்கப்படவேண்டும்.

4 மேலும் இப்புலங்களின் அருகாமையில் செல்லும் 171/1, 173/1, 172 மற்றும் 169 புறம்போக்கு கால்வாய்களுக்கு எவ்வித ஆக்கிரமிப்போ, இடையூறோ ஏற்படுத்தக் கூடாது

5. வீட்டுமனைப்பகுதிகள் அமைக்கும் பகுதிகளில் சதுப்பேரி ஏரியின் பாசனக்கால்வாய்கள் செல்வதினால் மனுதாரரின் சொந்த செலவில் வருவாய்த்துறையின் நில அளவையர்கள் கொண்டு நில அளவீடு செய்து எல்லைக்கற்கள் நடப்படுதல் வேண்டும்.

6. மனைப்பிரிவுகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை அருகில் உள்ள கால்வாயில் கலக்க விடாமல், வெளியில் கொண்டு செல்லும் வகையில் தக்க ஏற்பாடுகள் செய்து கொள்ளுதல் வேண்டும்.

7. சதுப்பேரி ஏரியின் பாசன கால்வாய் இடத்தை மாற்றியமைக்கவோ, கால்வாய் முப்பரிமாண அளவுகளை மாற்றுவதோ, ஆக்கிரமிப்பு செய்வதோ மற்றும் சேதப்படுத்துவதோ கூடாது. தவறும்ப்சத்தில் இத்துறையின் மூலம் அளிக்கப்பட்ட தடையின்மைச்சான்று ரத்து செய்யப்படுவதோடு சேதம் ஏற்படுத்தியதற்குண்டான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதன் புனரமைக்க ஆகும் மதிப்பீட்டு தொகையினை மனுதாரரே செலுத்தவேண்டும்.

8. வீட்டுமனைக் கட்டிடம் அமைக்கும் பகுதிகளில் உரிய மழைநீர் கட்டமைப்புகள் அமைத்தல் வேண்டும்.

9. மனைப்பகுதியில் நகர் ஊரமைப்பு சட்டப்படி உரிய Service Lanes (சாலைகள் அமைக்கப்படுதல் வேண்டும்.

10 பிரஸ்தாப நிலங்களில் குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட அனுமதிக்கும் முன், தளத்தின் மண்வகை பரிசோதனை செய்து கட்டிடங்கள் கட்ட தகுதியானதாக உள்ளதா என்பது குறித்து ஆராய்ந்து சம்பந்தப்பட்ட துறையின் சான்று பெற்று கட்டிடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்படுதல் வேண்டும்.

11 மனைப்பிரிவுகளாக மாற்றப்படவுள்ள பிரஸ்ராப நிலகளின் ஊடே பிற்காலத்தில் பாசனக்கால்வாய் ஏதேனும் இருப்பதாக கண்டறியப்பட்டால் அக்கால்வாயை மனுதாரரின் சொந்த செலவில் பாசனக்கால்வாய் முப்பரிமான அளவுகளுடன் அமைத்து பாசனக்கால்வாயாக பராமரிக்கப்பட வேண்டும்.

12 நீர்வள ஆதாரத்துறை அலுவலர்கள் ஆய்வு செய்ய வரும்போது மனைப்பிரிவினரால் எவ்வித தடையும் செய்தல் கூடாது.

13 இத்தடையின்மைச் சான்று வருங்காலங்களில் தடையின்மைச் சான்று தொடர்பாக இத்துறையின் மூலம் வெளிடப்படும் அரசாணைகளுக்கும் மற்றும் மாறுதலுக்குட்பட்டதாகவும் அமையும்.

மேலும், மேற்கண்ட நிபந்தனைகள் மீறும் பட்சத்தில் இந்த தடையின்மைச் சான்று இரத்து செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

7/7

24/5/22

மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்.

பெறுநர்

திரு.வி.எஸ்.பாபு, த/பெ. வி.எஸ்.சீனிவாசன்,
199/1, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
சத்துவாச்சாரி, வேலூர் - 632 009.

24/5/22

நகல்

1. வருவாய் கோட்ட அலுவலர், வேலூர்.
2. வட்டாட்சியர், வேலூர்.
3. பி2 இருக்கைக்கு.

நீர்வள ஆதார துறை

அனுப்புநர்

பொறி. மு.சண்முகம், பி.இ.,
செயற் பொறியாளர், நீஆது.,
மேல்பாலாறு வடிநில கோட்டம்,
வேலூர் - 632 006.

பெறுநர்

மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர் மாவட்டம்,
வேலூர் - 632 009.

கடித எண். வஅ/கோ.180 NOC/ 567 /2021/நாள் 27.08.2021.

அய்யா,

பொருள்:- நிலம் - தடையின்மைச்சான்று - வேலூர் மாவட்டம் - வேலூர் வட்டம், சதுப்பேரி கிராம பட்டா எண்.616-ன் புல எண். 171/3-ல் பரப்பு 0.03.0 ஹெக்டேர் மற்றும் பட்டா எண்.782-ன் புல எண்.170/1, 170/2, 170/3, 170/4, 171/4 மற்றும் 173/2 ஆகிய புலங்களில் மொத்த பரப்பு 1.13.0 ஹெக்டேர் ஆகமொத்த பரப்பு 1.16.0 ஹெக்டேர் நிலங்களில் வீட்டு மனைப்பிரிவு அமைக்க தடையில்லா சான்று கோரி திரு.V.S.பாபு த/பெ V.S.சீனிவாசன் மனு அளித்துள்ளது தொடர்பாக.

பார்வை:- மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் மாவட்டம், வேலூர் அவர்களின் கடித எண்.ந.க.பி2/6838/2020/நாள் 08.09.2020.

<>>o<<>

பார்வையில் காணும் மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் மாவட்டம், வேலூர் அவர்களின் கடிதத்தில் வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், சதுப்பேரி கிராம பட்டா எண்.616-ன் புல எண். 171/3-ல் பரப்பு 0.03.0 ஹெக்டேர் மற்றும் பட்டா எண்.782-ன் புல எண்.170/1, 170/2, 170/3, 170/4, 171/4 மற்றும் 173/2 ஆகிய புலங்களில் மொத்த பரப்பு 1.13.0 ஹெக்டேர் ஆகமொத்த பரப்பு 1.16.0 ஹெக்டேர் நன்செய் புலங்களில் வீட்டு மனைப்பிரிவு அமைக்க தடையில்லா சான்று கோரி வேலூர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், பகுதி -1, எண்.199/1-ல் வசிக்கும் திரு.V.S.பாபு த/பெ V.S.சீனிவாசன் என்பவர் அளித்துள்ள மனு குறித்து நீர்வள ஆதாரத்துறையின் கருத்துரு மற்றும் தடையின்மைச் சான்று ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி புலங்களை இத்துறை அலுவலர்களால் தளஆய்வு செய்து, இத்துறையின் கருத்துரு மற்றும் தடையின்மைச்சான்றினை இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது.

இணைப்பு: தடையின்மைச்சான்று.

செயற் பொறியாளர், நீஆது,
மேல்பாலாறு வடிநில கோட்டம்,
வேலூர்-6.

5/8/2021

தடையின்மைச்சான்று

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், சதுப்பேரி கிராம பட்டா எண்.616-ன் புல எண். 171/3-ல் பரப்பு 0.03.0 ஹெக்டேர் மற்றும் பட்டா எண்.782-ன் புல எண்.170/1, 170/2, 170/3, 170/4, 171/4 மற்றும் 173/2 ஆகிய புலங்களில் மொத்த பரப்பு 1.13.0 ஹெக்டேரில் திரு.V.S.பாபு த/பெ V.S.சீனிவாசன், என்பவரால் வீட்டு மனைப்பிரிவு அமைக்க தடையில்லாச் சான்று கோரியுள்ள நிலங்களின் மொத்த விஸ்தீரணம் 1.16.0 ஹெக்டேர் ஆகும். மேற்காணும் நன்செய் நிலங்கள் சதுப்பேரி ஏரியின் மதகு எண்.9-ன் கிழ் பாசனம் பெறும் பாசன நிலங்களாக உள்ளது. மனுதாரரின் நிலங்கள் சதுப்பேரி கிராம சாலைக்கு கிழக்கே அமைந்துள்ளன. புல எண். 170 மற்றும் 171-யை ஒட்டி கிழக்கு புறமாக சதுப்பேரி ஏரியின் மதகு எண்.8-ன் வழியாக பாசனக்கால்வாய் புல எண்.169-ல் சென்று அதன் கீழ் உள்ள நிலங்கள் பாசனம்பெறுகிறது. மேலும் புல எண்.171 மற்றும் 173-யை ஒட்டி மேற்கு புறமாக சதுப்பேரி ஏரியின் மதகு எண்.9-ன் பாசனக்கால்வாய் சென்று அதன் கீழ் உள்ள நிலங்களுக்கு பாசனம் பெறுகின்றன. இக்கால்வாய்கள் கால்வாயாகவே பராமரித்தல் அவசியம் ஆகும்.

பிரஸ்தாப நிலங்கள் அனைத்தும் கடந்த 12 ஆண்டுகளாக தரிசு நிலமாக உள்ளது என சதுப்பேரி கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் சான்று அளித்துள்ளார். பிரஸ்தாப நிலங்களை வீட்டுமனை பிரிவுகளாக பிரிக்கும் பட்சத்தில் அருகில் உள்ள பாசன நிலங்களின் பாசனத்திற்கு பாதிப்பு ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை.மேலும் புல எண்.171/4 மற்றும் புல எண்.173/2-ற்கு சதுப்பேரி ஏரியின் மதகு எண்.9-ன் பாசனக்கால்வாயை கடந்து செல்ல மனுதாரரின் சொந்த செலவில் இத்துறையின் அனுமதி பெற்று இத்துறையின் மூலம் சிறுபாலம் அமைத்துக்கொள்ள வேண்டும்.

இருப்பினும், தற்போது மனைப்பிரிவுகளாக அமைக்கப்படவுள்ள பிரஸ்தாப நிலங்களை ஒட்டி இருபுறமும் பாசனக்கால்வாய் செல்வதினாலும் மற்றும் புல எண்.171/3-ன் பரப்பு 0.03.0 ஹெக்டேர் நிலப்பரப்பை தவிர்த்து மீதமுள்ள புல எண்.170/1, 170/2, 170/3, 170/4, 171/4 மற்றும் 173/2-ன் மொத்தம் 1.13.00 ஹெக்டேர் நிலங்களுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தடையின்மைச் சான்று வழங்கலாம் என பரிந்துரை செய்யப்படுகிறது.

நிபந்தனைகள்:-

1. மனுதாரர் வீட்டு மனைப்பகுதிகளாக மாற்ற தடையில்லா சான்று கோரியுள்ள மொத்தம் 1.13.0 ஹெக்டேர் நன்செய் நிலங்களை விவசாயம் அல்லாத பிற உபயோகத்திற்கான வீட்டு மனைப்பகுதிகளாக மாற்ற நகர ஊராமைப்பு திட்ட சட்ட விதிகளுக்குட்பட்டு (Town & Country Planning) நிலவகை மாற்றம் செய்து கொள்ளுதல் வேண்டும்.

2. புல எண்.171/4 மற்றும் புல எண்.173/2-ற்கு சதுப்பேரி ஏரியின் மதகு எண்.9-ன் பாசனக்கால்வாயை கடந்து செல்ல மனுதாரரின் சொந்த செலவில் இத்துறையின் அனுமதி பெற்று சிறுபாலம் அமைத்துக்கொள்ள வேண்டும்.

3. வீட்டு மனைப்பகுதிகள் அமைக்கும் பகுதிகளில் சதுப்பேரி ஏரியின் பாசனக்கால்வாய்கள் செல்வதினால் மனுதாரரின் சொந்த செலவில் வருவாய்த்துறையின் நில அளவையர்கள் கொண்டு நில அளவீடு செய்து எல்லைக்கற்கள் நடப்படுதல் வேண்டும்.

4. மனைப்பிரிவுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரை அருகில் உள்ள கால்வாயில் கலக்க விடாமல், வெளியில் கொண்டு செல்லும் வகையில் தக்க ஏற்பாடுகள் செய்து கொள்ளுதல் வேண்டும்.

5. சதுப்பேரி ஏரியின் பாசன கால்வாய் இடத்தை மாற்றியமைக்கவோ, கால்வாய் முப்பரிமாண அளவுகளை மாற்றுவதோ, ஆக்கிரமிப்பு செய்வதோ மற்றும் சேதப்படுத்துவதோ கூடாது. தவறும்பட்சத்தில் இத்துறையின் மூலம் அளிக்கப்பட்ட தடையின்மைச் சான்று ரத்து செய்யப்படுவதோடு சேதம் ஏற்படுத்தியதற்குண்டான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதன் புனரமைக்க ஆகும் மதிப்பீட்டு தொகையினை மனுதாரர் அவர்களே செலுத்த வேண்டும்.

6. வீட்டு மனைக்கட்டிடம் அமைக்கும் பகுதிகளில் உரிய மழைநீர் கட்டமைப்புகள் அமைத்தல் வேண்டும்.

7. மனைப்பிரிவு பகுதியில் நகர் ஊரமைப்பு சட்டப்படி உரிய Service Lanes (சாலைகள்) அமைக்கப்படுதல் வேண்டும்.

8. மேற்படி பிரஸ்தாப நிலங்களில் குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட அனுமதிக்கும் முன் தளத்தின் மண் வகை சோதனை செய்து கட்டிடங்கள் கட்ட தகுதியானதாக உள்ளதா என்பது குறித்து ஆராய்ந்து சம்பந்தப்பட்ட துறையின் சான்று பெற்று கட்டிடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்படுதல் வேண்டும்.

9. மனைப்பிரிவுகளாக மாற்றப்படவுள்ள நிலங்களின் ஊடே பிற்காலத்தில் பாசனக்கால்வாய் ஏதேனும் இருப்பதாக கண்டறியப்பட்டால் அக்கால்வாயை மனுதாரரின் சொந்த செலவில் பாசனக்கால்வாய் முப்பரிமாண அளவுகளுடன் அமைத்து பாசனக்கால்வாயாக பராமரிக்கப்படவேண்டும்.

10. நீர்வள ஆதாரத்துறை அலுவலர்கள் ஆய்வு செய்ய வரும்போது மனைப்பிரிவினரால் எவ்வித தடையும் செய்தல் கூடாது.

11. இத்தடையின்மை சான்று வருங்காலங்களில் தடையின்மை சான்று தொடர்பாக இத்துறையின் மூலம் வெளியிடப்படும் அரசாணைகளுக்கும் மற்றும் மாறுதலுக்குட்பட்டதாகவும் அமையும்.

மேற்கண்ட நிபந்தனைகள் மீறும் பட்சத்தில் இந்த தடையின்மை சான்று இரத்து செய்யப்படுதல் வேண்டும்.

செயற் பொறியாளர், நீ.ஆ.து,
மேல்பாலாறு வடிநில கோட்டம்,
வேலூர்-6.

DO /2018/Tamil Letter 2017-18